| SCC/L-M/582 | M/s. PADMASREE GRAPHICS | Mr. M.R. KUBENDRAN | 9360328380 | 31.05.1962 |
| SCC/L-M/038 | M/s.SAPTHAGIRI BUILDERS | Mr. T.K.SIVAKUMAR | 9344102180 | 31.05.1967 |
| SCC/L-M/537 | M/S. A TO Z CCTV SYSTEMS | Mr. B.S. RAJAN | 9842182633 | 31.05.1971 |

SCC LIFE MEMBERS BIRTHDAY GREETINGS - MAY MONTH

பிறந்த நாள் காணும் மேற்கண்ட சேம்பர் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்

## SCC ANNUAL MEMBERS BIRTHDAY GREETINGS - MAY MONTH

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|
| SCC/O-M/292 | M/S. A.R.P. OFFSET | Mr. B.S. ANANDAN | 9841099353 | 01.05.1957 |
| SCC/O-M/475 | Ms.Ragu Traders | Mr.A.L.RAGURAM- Proprietor | 9047556242 | 01.05.1972 |
| SCC/O-M/639 | INVESTMENT CONSULTANT | Mr. B.K.M. GANESH BABU | 9843163611 | 02.05.1961 |
| SCC/O-M/218 | M/s. SREE GANESH ELECTRRICALS | Mr. M.S. GANESH KUMAR | 9944470789 | 04.05.1959 |
| SCC/O-M/694 | M/S. SARAVANAN TRADERS | Mr. M.G. RAVICHANDRAN | 9944305289 | 04.05.1961 |
| SCC/O-M/1097 | M/S. INFOBASE SYSTEMS | Mr. S. SUDHAKAR BABU | 9443066863 | 04.05.1961 |
| SCC/O-M/975 | M/S. LAKSHMI PLASTICS | Mr. P.S. JANARDHANAN | 9942422060 | 05.05.1957 |
| SCC/O-M/1117 | M/S. SIVA SCREENS GRAPHIC | Mr. S.R. SIVANATH | 9095074975 | 05.05.1970 |
| SCC/O-M/1045 | M/S. PRIYA BUILDER | Mr. K.G. RAMKUMAR | 9345213701 | 05.05.1972 |
| SCC/O-M/1028 | M/S. S.S. REMA DENTIST | Mrs. S.S. REMA | 9790177160 | 05.05.1982 |
| SCC/O-M/182 | M/s. OMSAKTHI BRAIDING | Mr.K.N. SUNDARAM | 9994628319 | 06.05.1961 |
| SCC/O-M/1065 | M/S. KALKI MILLET FOODS | Mr. T.J. SANTHI | 9094476110 | 06.05.1967 |
| SCC/O-M/792 | M/S. SIVA SILKS | Mr. B.D. RAVIKUMAR | 9976918365 | 06.05.1975 |
| SCC/O-M/1073 | M/S. AXN INFOTECH | Mr. K.J. RAVI KUMAR | 9677655855 | 06.05.1989 |
| SCC/O-M/771 | M/S. SHRI BHAGAVATHI JEWELLERS | Mr. T.L. SABARINATHAN | 9842060258 | 08.05.1980 |
| SCC/O-M/456 | M/S. MURUGAN TEX | Mr. N.K. SRIDHAR | 9842362968 | 09.05.1963 |
| SCC/O-M/919 | M/S. COSMOS CONSULTING SERVICES | Mr. M.R. MANOHARAN | 9843051970 | 09.05.1964 |
| SCC/O-M/992 | TAX CONSULTANT | Mr. K.G. GANESHAN | 9842111204 | 09.05.1969 |
| SCC/O-M/716 | M/S. VIJAI BANU TRADER | Mr. A.N. SHRINIVAS | 9443938474 | 09.05.1973 |
| SCC/O-M/548 | M/S. HARILAL BUILDING MATERIALS | Mr. K.S. MOHANLAL | 9843072626 | 09.05.1976 |
| SCC/O-M/365 | M/S. ELITE COMPUTERS INC | Mr. B.K.R. SIVAPRAKASH | 9443025231 | 10.05.1967 |
| SCC/O-M/356 | M/S. J.P. COLOR & CHEMICALS | Mr. K.K. JAYAPRAKASH | 9842139585 | 10.05.1968 |
| SCC/O-M/888 | M/S. YAMUNAMALA TEX | Mr. K.V. SANKAR | 9443862673 | 10.05.1968 |
| SCC/O-M/956 | M/S. HIL TECHNOLOGIES | Mr. N.M. AMARNATH | 9994433255 | 10.05.1977 |
| SCC/O-M/737 | | Mr. T.S. ESWAR | 9894142182 | 10.05.1982 |
| SCC/O-M/554 | M/S. SRI SAPTHAGIRI ASSOCIATE | Mr. T.K. RAMESH BABU | 9842172015 | 11.05.1970 |
| SCC/O-M/1129 | M/S. SIVAM ACCOUNTING | Mr. V.S. VISHNU KUMAR | 9629865026 | 11.05.1992 |
| SCC/O-M/989 | M/S. BIG BOSS MENS WEAR | Mr. T.K. SENTHIL KUMAR | 9894150749 | 12.05.1981 |
| SCC/O-M/789 | M/S. NALAS MASALA | Mrs. M.K. BHAVANI | 9994254648 | 13.05.1970 |
| SCC/O-M/654 | | Mr. N.S. RAMARATHINAM | 9894034472 | 14.05.1955 |
| SCC/O-M/779 | | Mr. P.R. SANKAR | 7708425199 | 14.05.1956 |
| SCC/O-M/949 | M/S. LAL DIGITAL VIDEO | Mr. O.K. PREMLAL | 9842123444 | 14.05.1963 |
| SCC/O-M/185 | M/s. UNITED MARKETING ENTERPRISES- | Mr. N.R. PREMNATH | 9865992452 | 14.05.1965 |
| SCC/O-M/580 | M/S. VISHNU ASSOCIATES | Mr. M.R. VISHNU PRABHU | 9842134333 | 14.05.1975 |
| SCC/O-M/701 | M/S. ESWARI CATERING | Mr. E.S.R. USHAMAI | 9344123222 | 15.05.1956 |
| SCC/O-M/700 | M/s. ANJALI FASHION BAGS | Mr. MANI Sir | 9942051707 | 15.05.1965 |
| SCC/O-M/375 | M/s. ALPHA COMMUNICATION | Mr. M.S. MAHESH BABU | 9843075804 | 16.05.1972 |
| SCC/O-M/479 | M/s.Mahalakshmi Traders, | Mr.A.L.KOSALRAM-Proprietor | 9894775250 | 17.05.1970 |
| SCC/O-M/987 | M/S. VETTRI VINAYAGA BAGS | Mr. O.R. SASIKUMAR | 9345209765 | 17.05.1973 |
| SCC/O-M/955 | M/S. SRI DURGA ENTERPRISES | Mr. M.A. SENTHIL KUMAR | 9865629160 | 17.05.1974 |
| SCC/O-M/1070 | M/S. UNIQUE SOURASHTRA ACADEMY - | Mr. P.K. CHANDRASEKARAN | 9363382299 | 18.05.1952 |
| SCC/O-M/926 | M/S. GLOBAL GARMENTS | Mr. A.P. MATHAVAN | 9244488350 | 18.05.1975 |
| SCC/O-M/1015 | | Mr. G.M. SRINIVASAN | 9443459736 | 20.05.1967 |
| SCC/O-M/1130 | M/S. ALIGN MULTIMEDIA | Mr. E.R. VASANTH BABU | 7338552954 | 21.05.1985 |
| SCC/O-M/164 | M/S. S.V.A. MARKETING | Mr. N.R. KUMARAN | 9380019255 | 22.05.1972 |
| SCC/O-M/353 | M/S. BLAACK FOREST | Mr. B. ANAND BABU | 9965459333 | 23.05.1969 |
| SCC/O-M/592 | M/S. Sri Durgai Traders | Mr. B.R. KUMARAN | 9360683421 | 23.05.1978 |
| SCC/O-M/1051 | M/S. G.S. PACKS | Mr. G.S. DANAPALAN | 9943956693 | 24.05.1970 |
| SCC/O-M/723 | | Mr. B.M. SIVAKUMAR | 9566712634 | 25.05.1977 |
| SCC/O-M/759 | M/S. SUN AGENCY | Mrs. K.P. REKHA | 9080668884 | 27.05.1980 |
| SCC/O-M/135 | Handloom Sarees Textile Agent | Mr.K.R.Jagadeesh | 9942437336 | 28.05.1958 |
| SCC/O-M/170 | M/S. SRI NAYAGI CATERING | Mr. K.G. KANNAN | 9600591336 | 30.05.1962 |
| SCC/O-M/728 | | Mr. S.D. KUMARAN BABU | 9244513474 | 30.05.1968 |

பிறந்த நாள் காணும் மேற்கண்ட சேம்பர் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்


**Sowndarya Traders**

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுகுகளிலும் கழுவ வேண்டும்.



# பொருட்கள் விற்காமல் இருப்பதற்கு காரணங்கள்!...

– தொழில் உலகம்

உங்கள் பொருட்கள் விற்காமல் இருப்பதற்கு 3 கோடி காரணங்கள் இருக்கலாம். வாடிக்கையாளர்கள் இடையே முறையான விழிப்புணர்வு இல்லாதிருத்தல் அல்லது பொருட்கள் முறையாக விளம்பரப்படுத்தாமை போன்ற பல காரணங்களாக இருக்கலாம்.

ஒரு தொழிலை தொடங்கி அதில் முன்னேற பல கடினமான பாதைகள் கடந்து வர வேண்டும். அது மிக சுலபமாக நடந்து விடும் என்று நீங்கள் எண்ணுவீர்கள். ஆனால் அது அப்படி அல்ல. ஒரு பொருளை சுலபமாக விற்க முடியும் என்றால் நம்மை சுற்றி இவ்வளவு தயாரிப்புகள் தோல்வியில் முடிந்திருக்காது.

புள்ளி விபரங்கள் காட்டுவது: 7 தயாரிப்புகளுள், ஒரே ஒரு தயாரிப்பு மட்டும்தான் வெற்றி அடைகிறது. 7 புதிய பொருள் தயாரிப்பு யோசனையில், 4 மட்டும்தான் அடுத்த கட்டத்திற்கு முன்னேறுகிறது. புதிய தயாரிப்புகள் பெரும்பாலும் 25-45 சதவீதம் தோல்வியையே அடைகிறது. ஒரு சூழ்நிலையில் உங்கள் தயாரிப்புகள் விற்கவில்லை என்றால், உடனே அதற்கான காரணத்தை கண்டறிய வேண்டும்.

**உங்கள் தயாரிப்பு வெற்றி அடையாமல் போக 3 முக்கியக் காரணங்கள் உண்டு.**

**சந்தை ஆராய்ச்சியில் நீங்கள் அதிக நேரம் செலவிடவில்லை:** உங்கள் தொழில் யோசனை மிகச் சிறந்ததாக இருக்கலாம், ஆனால், அது சந்தையில் நிலைத்திருக்குமா என்பது கேள்வி. உங்கள் தயாரிப்பு மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யுமா? அதை வாங்குவார்களா? பல சந்தை போட்டியாளர்களுடன் நிலைத்திருக்குமா? முதலில் சோதித்து பார்க்க வேண்டும் அல்லது தீவிரமாக சந்தை ஆராய்ச்சியில் இறங்க வேண்டும். சோதனை முயற்சியில் உங்களுக்கு சந்தையின் பல தேவைகள் புலப்படும். அது உங்கள் தயாரிப்பை மேம்படுத்த உதவும். உங்கள் சந்தை ஆராய்ச்சி போதுமானதாக இல்லை என்றால் நிச்சயம் உங்கள் தயாரிப்பு தோல்வியை சந்திக்கும். முறையான சந்தை ஆராய்ச்சி இல்லாமல் தோல்வியை தழுவியதற்கான மிகப்பெரிய வழக்கு ஆய்வு New Coke ஆகும்.

எண்பதுகளில் வெளிவந்த கோகோ கோலா பெரும் தோல்வியை தழுவியது. புதியது அல்லது பழையது எதுவாயினும் சுவையே முக்கியம் என நிறுவனம் எண்ணியது. ஆனால் அவர்கள் அசல் சுவை மற்றும் பிராண்ட் மீது உள்ள மதிப்பை மதிப்பீடு செய்யத் தவறிவிட்டனர். பழைய கோக் சந்தையில் இருந்து போய்விடும் என்று அஞ்சி மக்கள் அதன் மீதே அதிகம் பற்று கொண்டனர்.

மேலும், செக்வே வழக்கை யாரால் மறக்க முடியும்?. ஆமாம், இரு சக்கர செல்ப்-பாலன்சிங் ஸ்கூட்டர். நீங்கள் பெரும்பாலும் மால்கள், சுற்றுலா இடங்களில் அல்லது கட்டிடங்களில் பார்க்கும் ஸ்கூட்டர். இதில் உங்களுக்கு தெரியாதது என்னவென்றால், முதலில் இது போக்குவரத்திற்காக அதாவது அலுவலகத்திற்கு, பள்ளிக்கு செல்ல தயாரிக்கப்பட்ட வாகனம். ஆனால் செக்வே ஸ்கூட்டரை எப்படி பயன்படுத்த வேண்டும், எங்கு நிறுத்த வேண்டும் என்ற குழப்பத்தில் இது தயாரிக்கப்பட்ட உண்மையான நோக்கத்தை இழந்தது.

**உங்கள் வாடிக்கையாளர்களுக்கு உங்கள் தயாரிப்பு பற்றிய விழிப்புணர்வு இல்லை - முறையான விளம்பரம் இல்லாமையே காரணம்:** ஆரம்பத்தில் விளம்பரம் செய்ய அதிக பண முதலீடு செய்வது கடினம் என்றாலும் விளம்பரம் இல்லாமல் மக்களுக்கு உங்கள் தயாரிப்பை கொண்டு செல்ல முடியாது. உங்கள் தயாரிப்பின் நல்லது மற்றும் அதன்


வாழ்வில் வளம் பெற!
வர்த்தகத்தில் வெற்றி பெற!!
வரம் TV
94430 34009
Google Play Store - ல் SCT app
மூலம் நேரடியாக கண்டுகளியுங்கள்...
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
Contact:
99408 25179
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD

தேவையை நீங்கள் சொல்லாதவரை உங்கள் பொருள் விற்காது. சரி, உங்கள் பொருள் விற்கிறது ஆனால் போதுமான அளவு விற்பனை இல்லை என்றால் அதை பயன்படுத்த மக்களுக்கு தெரியவில்லை என்று அர்த்தம்.

உதாரணத்திற்கு, TATA நானோ மாடல் காரை வெளியிட்டது. இது இரு சக்கர வாகனம் வைத்திருக்கும் குடும்பங்களுக்கான அடுத்தக்கட்ட நிலைமையாக இருக்கும் என நம்பினார். ஆனால் மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு அது இல்லாததால் தோல்வி அடைந்தது. இது போன்றே Kellog's-க்கும் நடந்தது. பால் மற்றும் ஸ்பூன் கொண்ட Cereal-ஐ வெளியிட்டது. இதன் நோக்கம் பெற்றோர்கள் இல்லாத போது குழந்தைகள் தங்களாகவே அதை உண்ணுவது ஆகும். ஆனால் அதன் வடிவமைப்பு குழந்தைகளுக்கு ஏற்றதாக இல்லை. அதன் நோக்கத்தை சந்திக்காததால் அது தோல்வி அடைந்தது.

**நீங்கள் சந்தைப்படுத்திய நேரம் சரி இல்லை:** ஒன்று உங்கள் தயாரிப்பை முன் கூட்டியே வெளியிடுவது அல்லது தாமதமாக வெளியிடுவது. முன் கூட்டியே வெளியிட்டால் வாடிக்கையாளர்கள் உங்கள் தயாரிப்புக்குத் தயாராக இருக்க மாட்டார்கள். அதேபோல் தாமதமாக வெளியிட்டால் சந்தையில் அதிக போட்டி இருக்கும். பொருளாதார மற்றும் அரசியல் சூழல் உங்கள் தயாரிப்பிற்கு ஏற்றதாக அமையாதிருத்தல்.

மைக்ரோசாப்டின் Spot (Smart Personal Objects Technology) தோல்வி அடைந்தது. ஆனால் ஆப்பிள் மற்றும் சாம்சங் ஸ்மார்ட் வாட்ச் பெரும் வெற்றி அடைந்துள்ளது. இந்த ஸ்மார்ட் வாட்சின் முன்னோடி 10 வருடங்களுக்கு முன் வந்த மைக்ரோசாப்டின் Spot தான். Spot-ல் ஈமெயில் பெரும் வசதி, வானொலி, குறுஞ்செய்தி பெறுதல், செய்திகள் பெறுதல் போன்ற அம்சங்கள் இருந்தது. ஆனால் அவர்கள் அதை வெளியிட்ட நேரம் சரியானதாக இல்லை. மக்கள் அப்பொழுது அதீத வேகம் கொண்ட கைப்பேசிகளையே விரும்பினர்.

மற்றொரு எடுத்துக்காட்டு pets.com செல்லப்பிராணிகளுக்கு தேவையானதை விற்கும் தளம். இரண்டே வருடத்தில் இது மூடப்பட்டது. காரணம் ஆன்லைன் விற்பனை அப்பொழுது சரிந்து கொண்டிருந்தது. உங்கள் தயாரிப்பு விற்காமல் இருக்க இது போன்ற பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் இதில் இருந்து வெளிவர நிச்சயம் வழி இருக்கும். அதை காணுங்கள். சந்தையில் இருந்து உங்கள் தயாரிப்பை நிறுத்திவிட்டு, மெருகேற்றி மீண்டும் வெளியிடுங்கள். அது உங்களுக்கு சாத்தியம் இல்லை என்றால் தோல்வியை பாடமாக ஏற்று அடுத்த வேலைக்கு செல்லுங்கள்.

# நீதிநெறி

**தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்**
**நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் - தன்னை**
**வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்**
**நயவாமை யன்றே நலம்.**

– நீதிநெறி விளக்கம்

**பொருள்:** தன்னைப் பிறர் மதிக்கும்படி செய்வதற்காகத் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுதல் குளிர்ந்த நீரை விட்டுத் தீவிளக்கை வளர்த்தது போலாம்.

ஆதலால்,

**வியப்பாவது தன்னைத்தான் புகழ்ந்து**
**கொள்ளாமை யன்றோ நன்மதிப்பாகும்!**
**இன்பத்தை விரும்பாமையன்றோ இன்பமாகும்?**

**விளக்கம்:** தீ வளரும் என்று நீர்விட்டால் முன்னிருந்த தீயும் எப்படி வளராது அழிந்தே போகுமோ அதுபோலவே, தனக்கு மதிப்பு மிகுமென்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டால் இதற்கு முன்னிறுந்த மதிப்பு மிகாது அழிந்தே போகும் எனப்படுகிறது.

**கருத்து: தற்புகழ்ச்சி இகழ்ச்சியைத் தரும்.**

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் வயது 52, ஆசிரியராக பணிபுரிகிறேன். 6 மாதங்களாக தோள்பட்டை வலியால் அவதிப்படுகிறேன். கறுப்பு பலகையில் எழுத கை உயர்த்த முடிவதில்லை. மருத்துவர் எனக்கு SHOULDER IMPINGEMENT உள்ளது என்றார். தற்போது 2 வாரங்களுக்கு முன் தோள்மூட்டு நுண்துளை சிகிச்சை (SHOULDERARTHROSCOPY) செய்து கொண்டேன். வலி இல்லை. மூட்டின் அசைவுகள் நன்றாக இருக்கிறது. வேலைக்கு சென்று கறுப்பு பலகையில் எழுத ஆரம்பித்தால் வலி வரும் வாய்ப்பு உண்டா?

**பதில்:** IMPINGEMENT SYNDROME-க்காக செய்யப்படும் மூட்டு நுண்துளை சிகிச்சையில் தோள்மூட்டில் உள்ள SUBRACROMIAL என்னும் நீர்சுரப்பியில் புண் இருப்பதால் அது அகற்றப்படுகிறது. மேலும் IMPINGEMENT SYNDROME ஆகாமல் இருப்பதற்கு MINIMAL ACROMIOPLASTY செய்யப்படுகிறது. இவ்வாறு முறையாக செய்தால் தோள் மூட்டின் வலி நீங்கும். மற்றும் ஆறு முதல் பத்து வாரங்களில் கறுப்பு பலகையில் எழுதுவது உள்பட அனைத்து வேலைகளும் வலியின்றி செய்ய முடியும்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,

வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436


UIN No. Applied

MFG. No. 8/25 D

**பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.**

**எதிர்ப்பு சக்தி அதிகரிக்க**

**PLASMODIN CAPSULES 500 mg.**

**Increase Immunity Power**



Prop. : B.K.D. Suresh

4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538



# சிந்தனையை சீர்படுத்துங்கள்

– தினமணி

நம் சிந்தனைகள் எவையாக இருக்கிறதோ? அவையாகவே நாம் வாழ்கிறோம் என்று சொல்வார்கள். நாம் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் சிந்திக்கும் விஷயங்கள்தாம் நமது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. மனதிற்குள் அல்லது மூளைக்குள் நாம் யோசிக்கும் விஷயங்கள்தாம் நமது நடவடிக்கைகளில் பிரதிபலிக்கின்றன என்பது உளவியல் ரீதியான கருத்து.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, யோசனைகளை, சிந்தனைகளை, எண்ணங்களைக் கடந்துதான் வாழ்க்கையின் பல கட்டங்களில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறான். சிறு வயது முதல் முதுமை வரை சிந்தனையும், எண்ண ஓட்டங்களும் இல்லாத மனிதர்களே இருக்க முடியாது. ஒவ்வொரு வயதிலும் அந்த வயதிற்கேற்ற சிந்தனைகள் தோன்றுவது இயல்பு.

பள்ளியில் படித்து வரும் மாணவர்கள் அந்த வயதிற்கேற்ற சிந்தனைகளை உடையவர்களாக இருப்பார்கள். அந்த வயதிற்கே உரிய சினிமா கதாநாயகர்கள் குறித்த சிந்தனையுடன் வலம் வருவார்கள். அத்தகைய சூழலில் அந்த மாணவன் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் அவனுக்குப் பிடித்த ஹீரோவின் சாயல் பிரதிபலிக்கும். அனைவருமே இத்தகைய நிகழ்வுகளைக் கடந்துதான் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்திருக்க முடியும். இதில் குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை. இது ஏற்றுக் கொள்ளக் கூடிய இயல்பான ஒன்றுதான்.


பள்ளிப் பருவத்தில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை மட்டும்தான் இருக்கும். எதிர்காலத்தின் போக்கு குறித்து அவர்கள் யோசிக்க வேண்டிய அவசியம் அந்த காலகட்டத்தில் இல்லை. எனவே, சிந்தனையை கட்டிப் போட வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை.

அதேபோல் பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் உயர்கல்வி பெறுவதற்காக கல்லூரிகளில் நுழைந்து அங்கும் அதிகபட்ச காலம் மகிழ்ச்சியான மனநிலையுடன் உலா வருவது இயல்பான ஒன்றுதான். ஆனால் கல்லூரி காலம் முடிவை நெருங்கும் நேரம் தான் மாணவர்களின் சிந்தனையில் குழப்பங்களும், தடுமாற்றங்களும் ஏற்படக்கூடிய காலமாக மாறிவிடுகிறது. பெற்றோரும், உற்றார் உறவினர்களும், நண்பர்களும் அடுத்து என்ன செய்யப் போகிறாய்? என்ற வினாவினை தொடுக்கும்போது, இதுவரை சந்தோசமான சிந்தனையுடன், எண்ணங்களுடன் உலாவந்த மாணவர்களின் மனநிலை புதிய மாற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி எதிர்கொள்ள இயலாமல் பலர் தடுமாறும் நிலையையும் காண முடிகிறது.

மாணவப் பருவம் முடிந்து விட்டது. இளைஞர் என்ற புதிய பெயர் நமக்கு வந்துவிட்டது; இனி நம் எதிர்காலம் என்னவோ? என்ற தேவையற்ற அச்சம், அவர்கள் சிந்தனையில் விழுவதால் செயலற்ற மனநிலை அவர்களுக்குள் உருவாகிறது. இப்படி தனது எதிர்காலம் குறித்தும், கவலைப்பட்டு அதற்காக பல வழிகளைத் தேடி வருமானத்தைத் தரும் பணியில் சேர்ந்து, நாம் வென்று விட்டோம் என்று கூறிக் கொள்பவர்கள் சாதாரண இளைஞர்களாகவே வாழ்க்கையில் பயணிக்க முடியும். இவர்களால் பிறருக்கு லாபமோ, நஷ்டமோ கிடைக்கப் போவதில்லை.

அதேசமயம் மாறுபட்டு சிந்திப்பவர்கள், சாதனையாளர்களாக மாறி இந்த உலகத்திற்கு தொடர்ந்து


SRIS TEXTURE
ONLY TEXTURE SINCE 2009
Cell: 97891 08600
SRIS INTERIOR
* INTERIOR * WALL TEXTURE
* CONSTRUCTION CHEMICAL
No: 72, Devangar High School Road,
Coimbatore - 641 002
ID: srisinterior@rediffmail.com

தங்களாலான நன்மைகளைச் செய்ய முடியும். அதுபோன்ற சாதானையாளர்களாக நீங்கள் உங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். எதிலும் ஒரு கட்டுப்பாடு இருந்தால்தான் வெற்றியை நோக்கி எளிதில் பயணிக்க முடியும்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் ஓர் இனிப்புக் கடையைத் தாண்டும்போது அதன் வாசனை அவர்களை இழுக்கலாம். ஆனால், இனிப்பு சாப்பிட வேண்டும் என்ற சிந்தனையைக் கட்டுப்படுத்தி, அதனால் உடல் நலனுக்கு பிரச்னை ஏற்படும் பாதிப்பை அறிவுப்பூர்வமாகச் சிந்தித்து இனிப்பை சாப்பிடும் எண்ணத்தைக் கடப்பதுதான் சிந்தனையை ஒழுங்குபடுத்தும் பணி. இனிப்பு மட்டும் இல்லை, நமக்கு தீங்கு விளைவிக்கும் எல்லாவற்றையும் அறிவுப்பூர்வமாகச் சிந்திப்பதன் மூலமாகவே கடந்து செல்ல முடியம்.

அதுபோல், கல்லூரி படிப்பை முடித்து உலாவரும் இளைஞர்கள் எண்ணங்களுக்கு கட்டுப்பாடு விதிக்க பழகிக் கொள்ள வேண்டும். இளைஞர்களின் மனதில் எத்தனையோ எண்ணங்கள் ஓடத்தான் செய்யும். எந்த எண்ணம் இப்போது அவசியம்; எந்த எண்ணம் அனாவசியம் என்பதை புரிந்து தேவையான எண்ணங்களுக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்து, தேவையற்ற எண்ணங்களுக்கு அணை கட்டினால் எல்லா இளைஞர்களும் சாதனையாளர்களாக உயர முடியும்.

உதாரணமாக, திறன் வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டிருக்கும்போது பயிற்சியாளர் நடத்தும் பாடங்களை மட்டுமே நுட்பமாக கவனிக்க வேண்டும். அந்த நேரத்தில் வெளியே இருந்து ஒரு திரைப்படப் பாடல் ஒளிபரப்பப்பட்டால் அந்தப் பாடல் நமக்கு இப்பொழுது தேவையதானா? என்ற சிந்தனையை மனதில் இருத்தி, இப்போது தேவை பயிற்சி மட்டுமே என்ற சிந்தனையை உருவாக்கி விட்டால் நம் பயிற்சி சிறப்பாக அமையும்.

நாம் ஏதோ ஒன்றைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நமது சிந்தனை சரியானது தானா? அல்லது தவறா? இந்த சிந்தனையை செயல்படுத்தினால் நல்லது நடக்குமா? என்பன போன்ற விஷயங்களை அறிவுப்பூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

## கல்வி தான் மாற்றத்திற்கான தூண்டுகோல், இளைஞர்கள் தான் சமூக மாற்றத்திற்கான மிக சக்திவாய்ந்த முகவர்கள்



கல்வி தான் மாற்றத்திற்கான தூண்டுகோல் என்றும் இளைஞர்கள் தான் சமூக மாற்றத்திற்கான மிகவும் சக்தி வாய்ந்த முகவர்கள் என்றும் இந்திய குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக்கொள்கை 2020 குறித்து பேசிய அவர், ஒவ்வொரு தனி நபரின் குண நலமும் அறிவை அடித்தளமாகக் கொண்டு அமைவதாக கூறினார். **கல்வி தான் மாற்றத்திற்கான தூண்டுகோல் மற்றும் இளைஞர்கள் தான் சமூக மாற்றத்திற்கான மிக சக்திவாய்ந்த முகவர்கள்** என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தினார். கல்வி அறிவு பெற்ற இளைஞர்கள் சரியான பாதையில் வழி நடத்தப்படும் போது வரலாற்று சிறப்புமிக்க புரட்சிகரமான மாற்றங்களை அவர்களால் ஏற்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். இதைத்ததான் தேசிய கல்விக் கொள்கை 2020 நோக்கமாக கொண்டுள்ளது.

தற்போதைய மாறி வரும் சூழல்களுக்கு ஏற்ப ஆராய்ச்சி, திறன் மற்றும் அறிவுக்கூர்மை சார்ந்த துறைகளை அடிப்படையாகக்கொண்டு நவீன கல்விமுறையை வழங்க புதிய கொள்கை திட்டமிட்டுள்ளது. அதே வேளையில் எதிர்கால கண்ணோட்டத்துடன் இணைந்து நமது வளமான பாரம்பரிய கலாச்சாரமும் அதன் வரையறைக்குள் உட்படுத்தப்படும். தார்மீக மாண்புகளை வழங்குவதிலும் இந்திய கலாச்சாரம் குறித்த புரிதலை ஊக்குவிப்பதிலும் இந்தக் கொள்கை கவனம் செலுத்துகிறது.

இந்த கொள்கையை அமல்படுத்துவது வாயிலாக நவீன கற்றல் மற்றும் கல்விக்கான சகாப்தத்தை உருவாக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். நமது நாட்டு லட்சியங்களுக்கு ஈடாக நம் நாட்டு வளர்ச்சியை புதிய உச்சத்திற்கு எடுத்துச் செல்லும் வகையிலான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் வல்லுனர்கள் அடங்கிய படையை இந்தக் கொள்கை உருவாக்கும் என்று தெரிவித்தார்.

- PIB News


Life Long Tailor

வாங்கவந்தா பிடிக்கும்க

லைஃப்லாங் டெய்லர்

ரெடிமேட் இல்லங்க உங்கள் அளவில் எங்கள் துணியில்

காட்டன் சர்ட் ரூ. 400/- முதல் காட்டன் பேண்ட் ரூ. 500/-முதல் மற்றும்

திருமணம், திருவிழாக்களுக்கு குரூப் சர்ட் சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கிறோம்



1-B, பச்சரிசிக்கார தோப்பு, காமராஜர் சாலை, (தினமணி தியேட்டர் எதிர்சந்து), மதுரை-9.

81222 33001 90424 30763

TRADE MARK

# வணிகக்குறிகள் சட்டம் 1999

ஒரு தனிநபரோ, வணிக நிறுவனமோ அல்லது பிற சட்டப்படியான நபரோ தமது பொருளையோ, சேவையையோ தனது வாடிக்கையாளர்களிடம் தனித்துவமாய் அடையாளப்படுத்தப் பயன்படுத்தும் தனிப்பட்ட சின்னம் அல்லது குறியீடு வணிகச்சின்னம் அல்லது வர்த்தகக்குறி Trade Mark எனப்படும். இது ஒருவர் வழங்கும் பொருள் மற்றும் சேவையைப் பிறரிடமிருந்து தனிமைப்படுத்திக் காட்ட உதவும்.

ஒரு வணிகச்சின்னம் என்பது கீழ்கண்ட குறிகளின் மூலம் குறிக்கப்படுகிறது. "TM" என்பது பொருளைத் தனித்துவப்படுத்தும் பதிவுசெய்யப்படாத வணிகச்சின்னத்தைக் குறிக்கவும்; "SM" என்பது சேவையைத் தனித்துவப்படுத்தும் பதிவு செய்யப்படாத வணிகச்சின்னத்தைக் குறிக்கவும், "R" என்பது பதிவிட்ட வணிகச்சின்னத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

வணிகச்சின்னம் என்பது பொதுவாக பெயராகவோ, சொல்லாகவோ, சொற்றொடராகவோ, சின்னமாகவோ, இலச்சினையாகவோ, படமாகவோ, வடிவமைப்பாகவோ அல்லது இவை கலந்தோ அமையப்பெறும். வழக்கமான இவை அல்லாது வண்ணம், மனம், ஓசை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சில மரபுசாராத வணிகச்சின்னங்களும் உண்டு. பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான பதிவிற்கு வகை செய்தல், மேலான பாதுகாப்பை வழங்குதல் மற்றும் மோசடியாக குறிகளைப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக 1999ம் ஆண்டின் வணிகக் குறிகள் சட்டம் இயற்றப்பட்டது.

**வணிகக் குறிகள் சட்டம், 1999:** வணிகக் குறி -பிரிவு 2(1) (zb): வணிகக் குறி என்றால் படத்தோற்றம் போல் காட்டக்கூடிய ஒரு குறியாகும். அது ஒருவருடைய பொருள்கள் அல்லது சேவைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடியது. மற்றும் பொருள்களின் அடைப்புமுறை மற்றும் வண்ணங்களின் சேர்க்கை ஆகியவற்றை உள்ளடக்கும்.

**குறி (பிரிவு 2(1) (M) ):** குறி என்பது அடையாளம் (Device), தொழிற்சின்னம் (Brand), தலைப்பு (Heading), முகப்பு சீட்டு (Label), எண் (Numeral), பொருள்களின் அமைப்பு (Shape of Goods), பொருள்களின் அடைக்கும்முறை (Packaging) வண்ணங்களின் சேர்க்கை (Combination of Colors) அல்லது இவைகளின் இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கும்.

**சேவை பிரிவி 2(1) (Z):** சேவை என்பது பயன்படுத்தும் நபர்களுக்கு கிடைக்கக் கூடிய எவ்வித சேவையுமாகும். அவை வங்கி பணிகள், தகவல் தொடர்வு, கல்வி, நிதி, காப்புறுதி, சிட் பண்டுகள், ரியல் எஸ்டேட், போக்குவரத்து, சேமிப்பு, மூலப்பொருள் செய்முறை, மின்சாரம் அல்லது மற்ற சக்தி வழங்குதல், உணவு வசதி, இருக்கை வசதி, கேளிக்கை, வேடிக்கை, கட்டுமானப் பணி, பழுது பார்த்தல், செய்தி, தகவல் மற்றும் விளம்பரம் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கம்.

**பதிவினை மறுத்தல்:** ஒரு வணிகக் குறியைப் பதிவு மறுப்பதற்கு முழுமையான காரணங்கள் (Absolute Grounds) மற்றும் தொடர்புடைய காரணங்கள் (Relative Grounds) என இரண்டு காரணங்கள் உள்ளன.

**பதிவினை முழுமையாக மறுக்கப்படுவதற்கான காரணங்கள் (பிரிவு:9):** ஒரு வணிகக் குறி தனித்தன்மை கொண்டதாக இல்லையெனில் அல்லது பொதுநலனுக்கு எதிராக இருப்பினும் அல்லது முழுமையாக பொருள்களின் அமைப்பை மட்டும் குறித்திருந்தால் அந்த வணிகக் குறியை பதிவு செய்ய முடியாது.

1. பொதுமக்களை ஏமாற்றும் வகையில் அல்லது குழப்பம் விளைவிக்கும் வகையில் அமைந்தவை.

2. இந்தியாவிலுள்ள எந்தப் பிரிவிலுள்ள மக்களின் சமய உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் அமைந்தவை.

3. அவதூறு அல்லது ஆபாச (வெறுப்பூட்டும்) பொருள் கொண்டவை,

4. 1950ம் ஆண்டின் சின்னங்கள் மற்றும் பெயர்கள் (தவறாக பயன்படுத்துதலைத் தடுக்கும்) சட்டத்தின் (Emblem and Names (Prevention of Improper Use) Act, 1950) கீழ் தடைசெய்யப்பட்டவை பொதுநலனுக்கு எதிரானவை என்பது பிரிவி 9(2)ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆ. பதிவு செய்யப்பட்ட மறுப்பதற்கு தொடர்புடைய காரணங்கள் (பிரிவு 11). ஒரு வணிகக் குறி குழப்பத்தை


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
92445 00633
99433 79499
100 YEARS SRB SINCE 1901
SRB சில்க்ஸ் பொட்டிக்
158 & 158A, தெற்கு மாசி வீதி, மதுரை – 1.
SRB Silks & Boutique
59, South Bazaar, Palayam Kottai, Tirunelveli. Cell : 63852 13135
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.
SRB Silks & Boutique
Raja Annamalai Road, Saibaba Colony, Coimbatore. Cell : 94869 29246

ஏற்படுத்தக் கூடிய சாத்தியக்கூறு உள்ளவை அல்லது முந்தைய வணிக குறிகள் போல் அல்லது ஒத்த தன்மை அல்லது நன்கு அறியப்பட்ட வணிக குறிகள் போன்று அல்லது ஒத்து அமைந்திருந்தாலோ அல்லது முந்தைய வணிகக்குறி உடைமையாளரால் சட்டத்தின் வாயிலாக தடுக்கப்பட்ட சாத்திய கூறு இருந்தாலோ, சட்ட நடவடிக்கையால பதிவினை மறுக்கலாம். வேதியில் மூலக்கூறுகளின் அல்லது பன்னாட்டு நிறுவனங்களின் பெயர்களைப் பதிவு செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. (பிரிவு 13).

உயிரோடு இருக்கும் அல்லது இறந்த நபர்களின் பெயர்களை உருவமைப்பை பதிவு செய்ய, உயிரோடு இருக்கும் அல்லது இறந்த நபரை அல்லது நபர்களின் பிரதிநிதியின் ஒப்புதலை பெற்றுத்தர பதிவாளர் கோருவார். அவ்வாறு கொடுக்கத் தவறும் போது, அந்த பதிவுக் குறியை பதிவு செய்ய மறுக்கலாம். (பிரிவு 14).

**வணிகக் குறியை பதிவு செய்வதற்கான நடைமுறை...**

**1. மனுவைத் தாக்கல் செய்தல் (பிரிவு 18):** பல்வகைப்பட்ட பொருள்கள் அல்லது சேவைகளுக்கான வணிகக் குறிக்கான பதிவிற்கு ஒரே ஒரு மனுவைத் தாக்கல் செய்யலாம். அதற்கான பிரத்யேக மனுவில் விண்ணப்பிக்க வேண்டும்.

**2. மனுவை ஏற்றல் (பிரிவு 18(4) ):** மனுவின் பதிவு செய்யவிருக்கும் குறியானது. வணிகக்குறி பதிவேட்டில் அதே போன்று ஒற்றுமை கொண்ட நோக்கத்துடன் தேடுதல் நடைபெறும். ஆய்விற்குபின் மனுவை பதிவாளர் ஏற்கலாம் அல்லது திருத்தங்கள் அல்லது நிபந்தனைகள் அல்லது வரையறைகளுக்குட்பட்டு மனுவை ஏற்கலாம்.

**3. மனுவின் விளம்பரம் (பிரிவு 20):** பதிவிற்கான மனு ஏற்கப்பட்டிருப்பின், அவ்வாறு ஏற்கப்பட்டது என்பதை விளம்பரப்படுத்தப்பட்ட வேண்டும். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மறு அறிவிப்பு வழிவகையும் உள்ளது. (பிரிவு 20(2)).

**4. பதிவிற்கான எதிர்ப்பு (பிரிவு 21):** பதிவிற்கான மனுவின் பேரிலான விளம்பர அல்லது மறு விளம்பரத் தேதியில் இருந்து நான்கு மாதத்திற்குள் பதிவாளருக்கு அறிவிக்கை கொடுத்து, எவர் வேண்டுமானாலும் எதிர்க்கலாம். மேற்படி அறிவிக்கை மனுதாரருக்கு அனுப்பப்படும். அந்நகலை பெற்ற நாளிலிருந்து 2 மாதத்திற்குள் பதில் அனுப்ப வேண்டும். இல்லையெனில் மனு கைவிட்டதாக கருதப்படும். மனுவில் உள்ள தவறுகளை களைவதற்கு அனுமதி வழங்கலாம்.

**5. மனுவின் பதிவு (பிரிவு 23):** மனு எதிர்க்கப்படாமல் இருந்து மற்றும் எதிர்ப்பிற்கான அறிவிக்கையின் கால அளவு முடிவுற்றிருந்தால் அல்லது மனுவானது எதிர்க்கப்பட்டு அந்த எதிர்ப்பு மனுதாரருக்கு சாதகமாக முடிவுற்றிருந்தால் மனுவை ஏற்று பதிவு செய்வார்.

**கூட்டாக உடைமை உரிமை (பிரிவு 24(1) ):** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூட்டு உடமையாளராக பயன்படுத்தப் பதிவு செய்யப்படமாட்டாது. எனினும், அனைவரது சார்பாக அன்றி தனியாக பயன்படுத்தப்பட மாட்டாது என்கிற போது பதிவு செய்யலாம்.

**வணிகக் குறிக்கான கால அளவு:** வணிகக் குறியின் பதிவு 10 ஆண்டு காலத்திற்கு செல்லுபடியாகும் (பிரிவு 25(1) ). உரிய கட்டணம் செலுத்தி பதிப்பித்த நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம். (பிரிவு 24(2)).

**பதிவினால் கிடைக்கும் உரிமைகள் (பிரிவு 28):**

1. பொருள்கள் அல்லது சேவைகள் குறித்து அதனை பயன்படுத்தப் பெறும் தனிமுறையிலான உரிமை.

2. வணிக குறியின் உரிமை மீறுகையில், வழக்குத் தொடுக்கப்பெறும் உரிமை.

**வணிகக் குறியின் உரிமை மீறல்:** வணிகக் குறியானது, வணிகத்தின் போது கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் மீறப்படுகிறது.

1. ஒரு குறியானது பதிவு செய்யப்பட்ட குறியை போல ஒன்றுபட்ட தன்மை, ஏமாற்றுவகை ஒற்றுமையாக இருந்து அதை பயன்பட்டதாக இருக்கும் போது (பிரிவு 29(1) ). பதிவு செய்யப்பட்ட வணிக குறியுடனான ஒன்றுபட்ட தன்மை அல்லது பொருள்களின் / சேவைகளின் ஒத்த தன்மை ஒன்றுபட்ட தன்மை. வணிகக் குறியுடன் ஒத்த தன்மை (பிரிவு 29(2) ). பொதுமக்களிடம் குழப்பம் விளைவிக்க, இந்தியாவில் நன்மதிப்பு பெற்று இருந்து அதற்கு கெடுதல் விளைவிப்பதாக இருக்கும் போது (பிரிவு 29(4)).

2. பதிவு பெற்ற வணிகக் குறியை தனது வணிகக்குறி அல்லது தனது தொழில் நிறுவனத்தின் பெயர் போல் பயன்படுத்தப்படும்போது (பிரிவு 29(5)).

3. முகப்பு சீட்டாக ஒட்டுவதற்கு அல்லது பொருள்களின் அடைப்பு முறைக்கு பொருள்களின் அல்லது சேவைகளின் விளம்பரத்திற்கு பயன்படுத்தப்படும் போது (பிரிவு29(7)).

4. அவ்வாறு விளம்பரத்திற்கு பயன்படுத்தப்படும் போது குறியின் நன்மதிப்பை கெடுப்பதாக இருக்கும்போது (பிரிவு 29(8) . பதிவு பெற்ற வணிகக் குறியின் தனிப் பண்புக் கூறாக மற்றும் காட்சி தோற்றமாக இருக்கும்போது அல்லது பேசப்படும் போது (பிரிவு 29(9) ). ஒரு வணிகக் குறியானது மீறுகைக்கு ஆளாகிறது.

**உரிமை மீறுகையாக அமையாத பயன்பாடு:** குறிப்பிட்ட சில செயல்கள், உரிமை மீறுகையாக அமையாது. அவை, (பிரிவு 30):

1. தொழிற்சாலை மற்றும் வர்த்தக செயல்களில் நேர்மையான நடைமுறைகள்:

2. வணிக குறியை பயன்படுத்துவதில் நேர்மையற்ற முறையில் ஆதாயம் தேடிக் கொள்ளாமலும் நன்மதிப்பிற்கு கேடு விளைவிக்காமலும் பயன்படுத்துவது;

3. பொருள்கள் அல்லது சேவைகளின் பண்புகூறு, இயல்பு அல்லது புவியியலின் தோற்றம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டி பயன்படுத்துவது.

4. பதிவு பெற்ற பயன்படுத்துபவரின் நோக்கத்தை சுட்டிக் காட்டுவது.

5. வணிகக்குறியின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தாண்டி பயன்படுத்துவது. (மேலும் எல்லைகள் தாண்டிய பகுதிகளில் பயன்படுத்துவது உரிமை மீறல் ஆகாது. எனினும், அது வணிக போலி செயலுக்கு ஒப்பாகும்.) (பிரிவு 30(2) (b)).

6. வணிக குறியை சட்டப்படி அல்லது உரிமையாளரின் ஒப்புதலுடன் பயன்படுத்தும் பொழுது சில்லறை விற்பனையில் பயன்படுத்தும் பொழுது.

7. வணிகக் குறியை பொருள்களின் பாகங்களுக்கு அல்லது துணைபொருட்களுக்கு பயன்படுத்தும் பொழுது.

8. ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு பதிவு உரிமை வழங்கப்பட்டிருக்கும் போது.

9. மாற்றாக்கம் ஒன்றை பெற்றிருக்கும் போது (பிரிவு 30(3)).

உரிமை மீறலுக்கு எதிராக கிடைக்கும் தீர்வழிகள்:

அ. உரிமையியல் தீர்வழிகள் (Civil Remedies)

1. உறுத்துக் கட்டளை (Injunction), 2. இழப்பீடு அல்லது ஆதாய கணிப்பு (Damages of Account of Profit), 3. ஒப்படைப்பிற்கான உத்தரவு.

ஆ. குற்றவியல் தீர்வழிகள் (Criminal Remedies)

**இ. நிர்வாக தீர்வழிகள் (Administrative Remedies) வணிகக் குறிகள் மாற்றாக்கம் உரிமை மாற்றம்: (Assignment and transmission of Trade Marks):** வணிக குறிகளை மாற்றாக்கம் மற்றும் உரிமை மாற்றம் செய்ய வழி வகுத்துள்ளது. வணிக நற்பெயருடன்(**Goodwill**) சேர்த்தோ சேர்க்காமலோ இருக்கலாம். மாற்றாக்கம் செய்வதற்கான உரிமை, உடைமையாளருக்கு மட்டுமே உள்ளது. இந்தியாவில் பல்வேறு பகுதிகளுக்குத் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டிருக்கும் போது, மாற்றாக்கம் அல்லது உரிமை மாற்றம், நிலப்பகுதிகளின் அடிப்படையில் வணிகக் குறியை பிளவு படச் செய்து பல்வேறு நபர்களுக்கு பல்வேறு பகுதிகளுக்கு உரிமைகள் ஏற்படுவதை தடுக்கிறது. (பிரிவு 41).

**குற்றங்களுக்குத் தண்டனை:** பொய்யாக வணிகக் குறியை, வணிக விவரிப்புகளை பயன்படுத்தியதற்கான 6 மாதம் வரை சிறை தண்டனையும், ரூ. 50000 முதல் 2 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும் (பிரிவ 103). பொய்யாக வணிகக் குறியை, வணிக விவரிப்புகளை கொண்ட பொருட்களை விற்றால் பயன்படுத்தியதற்கான 6 மாதம் முதல் 3 ஆண்டு வரை சிறை தண்டனையம், ரூ. 50000 முதல் 2 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 114). வணிகக் குறி பதிவு செய்யப்பட்டுள்ளது என பொய்யாக உரைத்தால் 3 ஆண்டு வரை சிறை தண்டனை அபராதமும் விதிக்கப்படும் (பிரிவு 107). தொழிலுக்கான இடமானது, வணிகக் குறிகள் அலுவலகத்துடன் தொடர்புள்ளதாக முறையற்று கூறினால் 2 ஆண்டு வரை சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் (பிரிவு 108). பதிவேட்டில் பொய்யான குறிப்புகளை ஏற்படுத்தினால் 2 ஆண்டு வரை சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 109). கம்பெனிகள் இழைக்கும் குற்றத்திற்கு பொறுப்புள்ள ஒவ்வொரு நபரும் பொறுப்பாவார்கள் (பிரிவு 114). -தினமணி




## பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியின் முக்கிய அம்சங்கள்

- சுகாதாரத்திற்கான காலாவதியாகாத ஒற்றைத் தொகுப்பு வைப்புநிதி பொது கணக்கில் உருவாக்கப்படும்.
- சுகாதாரம் மற்றும் கல்விக்கான மேல்வரி வருவாய் மூலம் கிடைக்கும் நிதியில் சுகாதாரத்தில் பங்கு, பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியின் கணக்கில் உருவாக்கப்படும்.
- பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியில் சேர்க்கப்படும் தொகை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ்க்காணும் முக்கிய திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்.
  - ஆயுஷ்மான் பாரத் - பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டம்.
  - ஆயுஷ்மான் பாரத் - சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள்,
  - தேசிய சுகாதார இயக்கம்.
  - பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா திட்டம்.
  - மருத்துவ அவசர காலங்களின் போது அவசரகால மற்றும் பேரிடர் தயார் நிலை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்.
  - நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் தேசிய சுகாதார கொள்கை 2017-ன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கான எதிர்கால திட்டங்கள்.
- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் இந்தத் தொகுப்பின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்படும்.
- எந்த நிதி ஆண்டிலும் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கான செலவினங்கள் முதலில் இந்த வைப்பு நிதியிலிருந்தும், அதன்பிறகு ஒட்டுமொத்த நிதிநிலை ஆதரவிலிருந்தும் வழங்கப்படும்.

**பயன்கள்:** ஒதுக்கப்பட்ட தொகை, நிதி ஆண்டின் முடிவிற்குள் காலாவதியாகாததை உறுதிசெய்து, ஒதுக்கப்பட்ட வளங்களின் இருப்பைக் கொண்டு அனைவருக்கும் கிடைக்கும் வகையில் சர்வதேச தரத்திலான மருத்துவ சேவையை வழங்குவது இதன் முக்கிய பயனாகும். - pibnews/pressrelease



# மன இறுக்கத்தைத் தளர்த்தும் வழிகள்

– எழுத்து.காம்

அலுவலகம், வீடு என பம்பரமாய் சுற்றும் மக்கள், வாரத்தின் இறுதி நாளுக்காக ஏங்குவது வழக்கம். மன நிம்மதிக்காக, எங்கேயாவது செல்லலாம் என நினைப்பதற்குள், விடுமுறை நாள் ஓடிவிடும். மன இறுக்கத்தோடு, தினசரி பொழுதை கழிப்பது பெரும் வேதனை. இதை தவிர்க்க, ரிலாக்ஸாக வேலை செய்ய, சில எளிய குறிப்புகள் இதோ:

**சத்தான உணவை சாப்பிடுங்கள்:**

சத்தான, இயற்கையான உணவு வகைகளைச் சாப்பிடும்போது, மூளை சுறுசுறுப்பாக இருக்கும். பதப்படுத்தப்பட்ட, டின்களில் அடைக்கப்பட்ட உணவுகளைச் சாப்பிடும்போது, உடல் ஒருவித மந்தநிலையை அடைகிறது. இதனால், நாம் செய்யும் செயல்களில், சோர்வடைந்து குறிப்பிட்ட நேரத்திற்குள், பணிகளை முடிக்க முடியாத நிலை ஏற்படலாம்.

**நன்றாகத் தூங்குங்கள்:**

நல்ல ஆழந்த தூக்கம், எல்லாருக்கும் அவசியம். பகலில் நாம் செய்யும் வேலைகளினால், களைப்புறும் உடல் உறுப்புகள், தூக்கத்தில் மட்டுமே புத்துணர்ச்சி அடைகின்றன. தூக்கம் தடைபடும் போது, உடல் நலக்குறைவு ஏற்படும். இளைஞர்களுக்கு, ஆறு முதல் எட்டு மணி நேரம் வரை தூக்கம் அவசியம்.

**நடங்கள்... ஓடுங்கள்!...:**

தினமும், அதிகாலை எழுந்தவுடனோ அல்லது மென்மையான மாலை வேளைகளிலோ, மெல்லோட்டம் (Jogging) செய்யும் வழக்கத்தை, ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லது கை கால்கள் வீசி, விரைந்து நடக்கலாம். இது உடல் இறுக்கத்தை, பெருமளவு தளர்த்தும்; மனம் உற்சாகம் பெறும். ஆரம்பத்தில், அதிகாலை எழுவதும், மெனக்கெட்டு செல்ல வேண்டுமா எனத் தோன்றுவதும் இயல்பு. பத்து நாட்கள் விடாமல் சென்றால் பழகிவிடும். பின், 40 வயதுக்காரர் கூட, 20 வயது இளைஞனைப்போல், உற்சாகமாக வேலை செய்யலாம்.

**ஓய்வெடுங்கள்:**

பணியிடையே, அவ்வப்போது ஓய்வெடுங்கள். ஓய்வெடுத்தல் என்பது, வேலையை நிறுத்திவிட்டு அரட்டை அடிப்பதல்ல. கண்களை மூடி நன்றாக மூச்சை ஆழ்ந்து இழுத்து, சற்று நிறுத்தி, மெல்ல விடுங்கள். கடினமான, மிகக் கவனமான, வேலைகளைச் செய்வோர் செய்யும் சுவாசம், மேம்போக்காக இருக்கும். அதனால், மூளைக்கு சரியான அளவு ஆக்ஸிஜன் செல்லாமல் தலைவலி, உடல் சோர்வு ஏற்படும். ஒரு மணிநேரக் கடின வேலைக்கு, ஐந்து நிமிட ஓய்வு போதுமானது.

**சிரியுங்கள்:**

மனம் விட்டு சிரியுங்கள். மனம் விட்டு என்பதற்கு, ஆழ்ந்த அர்த்தமுண்டு. சிரிக்கும் போது, மனதில் எந்தவித எண்ணங்களும் இருக்கக்கூடாது. சிரிக்கும்போது நன்றாக, முழுமையாக ரசித்துச் சிரிக்க வேண்டும். வேறு ஏதேனும் சிந்தனை தோன்றி, பட்டென்று சிரிப்பை நிறுத்தும்போது, வேறு விளைவுகளை ஏற்படுத்தும். எப்போதும் சிரித்து இன்முகம் காட்டுபவர் முகத்தில், ஒருவித தேஜஸ் இருக்கும். அது மற்றவர்களை கவர்ந்திழுக்கும் வல்லமை கொண்டது. இவற்றை தொடர்ந்து செய்து வந்தால், ரிலாக்ஸ் ஆக பீல் பண்ணுவீர்கள்!.



## இரங்கல்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் ஆண்டு சந்தா உறுப்பினர், முன்னாள் தாசில்தாரும், துர்கா அஸோசியேட்ஸ் உரிமையாளருமான தொப்பே திரு. **T.R. பாலகிருஷ்ணன்** அவர்கள் கடந்த 20.03.2021 அன்று காலை இறைவனடி சேர்ந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு சேம்பர் அழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC


No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் ஸௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY



## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## நியூ தாசு மெட்டல்ஸ்
## NEW DASU METALS

DASU SINCE 1993

25

BRASS AND COPPER POOJA ARTICLES, UTENSILS, STATUES, WHITE METAL HANDICRAFTS, SS VESSELS, TROPHIES, SHIELDS AND GIFT ARTICLES.

254, KAMARAJAR SALAI (NEAR ARASAMARAM), MADURAI - 09)

0452 4368753 | New Dasu Metals | newdasumetals

www.newdasumetals.com



## Plan & Built

Civil Construction & Interior

DTCP APPROVED LAYOUT

ம.வ(மு) க.ஊ.தி.இ.எண்: 599/2018

## GOLDEN CITY

இராமு சீதா பாலிடெக்னிக் எதிரில், காரியாபட்டி.

12.5 லட்சம் முதல் தனித் தனி வீடுகள்

2.15 லட்சம் முதல் வில்லா பிளாட்டுகள்

Contact : 8754660660, 9745520920, 9962295452

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Office : 163-A2, First Floor, Thamgam Nagar, Ganesh Theater Signal, Kamarajar Salai, Madurai - 625 009.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.04.2021 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

info@onvgprint.com
+91 95 97 775 775
FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

**onVGPrint.com**

— A unit of VIGNESH GRAPHICS —

visit : www.onvgprint.com

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

**Dr. K.N. சுப்ரமணியன்** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service






**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஐவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள் » மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

» மூட்டு நுண்துளை சிகிச்சை » விபத்து அறுவை சிகிச்சை
» முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை » விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

**கைத்தறியில் ஓர் புதுமை**

**Electronic Jacquard**




**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



**Applications :**
• Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
• Blankets • Made Ups • Shirting



**SRE CORPORATION**

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com

N.S. Rajan



T.S. Saravanan

***Official Publication:***
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org